தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 672/2016/பே

ஆணை எண்: 209/2017

நாள்: 22–08–2017

திரு. டி. விஜயகுமார்,
வழக்கறிஞர்,
குற்றிக்காடு வீடு, திருப்புரம்,
முன்னைவிளை அஞ்சல்,
திருவனந்தபுரம். — முறையீட்டு மனுதாரர்

திரு. ஸ்டீபன்,
முன்னாள் வார்டு உறுப்பினர்,
கொல்லங்கோடு பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். — எதிர் மனுதாரர்

## ஆணை

திரு. டி. விஜயகுமார், என்பவரின் முறையீட்டு மனு நாள்: 28.04.2015, பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.7317/2015/இ.2/ நாள்:20.06.2015–ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தால் 11.07.2015 அன்று பெறப்பட்டு 672/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. டி. விஜயகுமார் தனது முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு பேரூராட்சியின் முன்னாள் 7–வது வார்டு உறுப்பினர் திரு. ஸ்டீபன் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தியும், மேற்படி வார்டு உறுப்பினர் அலுவலர்களை மிரட்டுவதாகவும், இவருக்கு கமிஷன் கொடுப்பவர்களுக்கு ஒப்பந்த பணிகள் வழங்குவதாகவும், இவரை தட்டி கேட்கும் அரசு அலுவலர்கள் மீது பொய்யான புகார்களை மேலதிகாரிகளுக்கு அனுப்பி அதிகாரிகளை சிக்க வைப்பதாகவும். மேலும் பல புகார்களை தெரிவித்து தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இவரின் முறையீட்டு மனுவினை உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற சட்டம் 2014 விதி 6 ( மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) ல் நிர்ணயித்தவாறு மனுவினை ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் உரிய படிவத்தில் சமர்ப்பிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.672/2016/பே/ நாள்:19.07.2016ன் மூலம் அறிவிப்பாணை அனுப்பப்பட்டு இதுவரை மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை உரிய முறையில் சமர்ப்பிக்கவில்லை.

இருப்பினும், மேற்படி முறையீட்டு மனுவின் மீது உரிய விளக்கத்தினை சமர்ப்பிக்கக் கோரி பேரூராட்சி செயல் அலுவலர், கொல்லங்கோடு அவர்களை இம்முறைமன்ற நடுவ அறிப்பாணை எண்.672/2016/பே/நாள்:02.12.2016,27.01.2017, மற்றும் 07.07.2017 அறிப்பாணைகள் மூலம் கோரப்பட்டது.

மேலும் முறையீட்டு மனுதாரர் திரு. டி. விஜயகுமார், அவர்களை, முறையீட்டு மனு குறித்தான தனது நேரடி வாக்குமூலத்தை பதிவு செய்யக்கோரி இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.672/2016/பே/நாள்:02.12.2016–ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் 19.01.2017 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் மேற்படி முறையீட்டு மனுதாரர் நேரடி விசாரணைக்கும் ஆஜராகவுமில்லை, எவ்வித விளக்கமும் அனுப்பி வைக்கவுமில்லை.

இதனைத் தொடர்ந்து மேற்படி கொல்லங்கோடு பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித எண்.133/2017/அ.1/நாள்:27.7.2017–ன் மூலம் தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"...மேற்படி முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள முன்னாள் உறுப்பினர் திரு. ஸ்டீபன், 2011ம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் 7வது வார்டு உறுப்பினராகவும், 2016–ம் ஆண்டு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் கொல்லங்கோடு பேரூராட்சி துணைத் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டதாகவும், அவரின் தலையீடு பேரூராட்சி நிர்வாகத்தில் ஏதும் இல்லை எனவும். அனைத்து பணிகளும் ஒப்பந்த முறையில் முறையாக ஒப்பந்தம் பெறப்பட்டு, குறைந்த ஒப்பந்தம் கோருபவர்களுக்கு பணிகள் முறையாக ஒப்படைக்கப்பட்டு பணிகள் முடிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் திரு. ஸ்டீபன் அவர்களால் பேரூராட்சியில் பணிபுரியும் எந்த அதிகாரிகளுக்கும் எவ்வித மிரட்டலும், தொந்தரவும் இல்லை எனவும் அனைத்துப் பணிகளும் முறையாக ஒப்பந்த புள்ளிகள் திறந்தவெளி ஒப்பந்தபுள்ளிகளாக பெறப்பட்டு குறைந்த

ஒப்பந்தப்புள்ளி கோரும் ஒப்பந்தக்காரருக்கு பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுடன் பணி ஒப்படைக்கப்பட்டு பொறியியல் பிரிவினரின் மேற்பார்வையில் பணிகள் முறையாக நடைபெற்றுள்ளதெனவும் தெரிவித்துள்ளார். முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு உரிய அலுவலரின் மேலொப்பத்துடன் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் திரு. டி. விஜயகுமார், முறையீட்டு மனுதாரர் தனது மனுவினை விதிகளின்படி உரிய முறையில் அனுப்பக் கோரி அறிவிப்பாண அனுப்பியும், 19.01.2017 அன்று தனது முறையீட்டு மனு குறித்து விளக்கங்கள்/வாக்குமூலங்களை அளிக்க கோரி இம்முறைமன்ற நடுவ அமைப்பினால் உரிய வாய்ப்புகள் அளித்தும் அவ்வாறு செயல்பட மனுதாரர் தவறியுள்ளார். இந்நிலையில் செயல் அலுவலர், கொல்லங்கோடு அவர்களின் விளக்கத்தினை ஏற்று முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2017 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 22- ஆம் நாளன்று என்னால் கையாப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு. டி. விஜயகுமார்,
வழக்கறிஞர்,
குற்றிக்காடு வீடு, திருப்புரம்,
முன்னைவிளை அஞ்சல்,
திருவனந்தபுரம்.

நகல்

செயல் அலுவலர்,
கொல்லங்கோடு பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.